தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம்
மக்கள் தொடர்பு அலுவலகம்
கோயம்புத்தூர் - 641 003

முனைவர் ஜெ. வெங்கட் பிரபு Ph.D.,
மக்கள் தொடர்பு அலுவலர் &
பேராசிரியர் (வேளாண் விரிவாக்கம்)
கைப்பேசி: 94890 56730

தொலைபேசி: 0422 - 6611302
நிகரி: 0422 - 2431821
மின்னஞ்சல்: pro@tnau.ac.in

---

பெறுநர்,
ஆசிரியர்,

தேதி: 20-8-2014

ஐயா,

கீழே குறிப்பிடப்பட்டுள்ள செய்தி விவரத்தினை தங்களது மேலான நாளிதழில் பிரசுரிக்குமாறு அன்புடன் வேண்டுகிறேன்.

## ஆகஸ்ட் 2014 மாதத்திற்க்கான பூச்சி நோய் கண்காணிப்பு – கட்டுப்பாட்டு முறைகள்

ஆகஸ்ட் மாதத்திற்க்கான பூச்சி நோய் கண்காணிப்பு மற்றும் கட்டுப்பாடு முறைகள் குறித்து பயிர் பாதுகாப்பு மையம், தமிழ்நாடு வேளாண்மை பல்கலைக் கழகத்தின் அறிக்கை.

**நெல்பயிர்**

கோயமுத்தூர், ஈரோடு, நாகப்பட்டினம், தேனி, தர்மபுரி, திண்டுக்கல், திருநெல்வேலி, திருவண்ணாமலை, புதுக்கோட்டை மற்றும் சேலம் மாவட்டங்களில் நெல் பயிரில் இலைச் சுருட்டுப் புழு மற்றும் தண்டுப் புழு தாக்குதல் பரவலாக காணப்படுகின்றன. பூச்சிகளை கட்டுப்படுத்த வயல்களில் விளக்கு பொறி அமைத்து (1 / ஏக்கர்) அந்திப் பூச்சிகளை கவர்ந்து அழிக்கவும்.

பூச்சிகளின் தாக்குதல் அதிகமாய் தென்பட்டால் வேப்பங் கொட்டைச்சாறு 5 சதம் அல்லது பாசலோன் 35 இ . சி 1500 மில்லி / எக்டர் அல்லது குனைல்பாஸ் 25 இ . சி 1000 மில்லி / எக்டர் அல்லது பாஸ்மோமிடான் 40 எஸ். எல் 600 மில்லி எக்டர் அல்லது பிரபினோபாஸ் 50 இ . சி. 1000 மில்லி / எக்டர் தெளிக்கவும்.

திருநெல்வேலி மாவட்டத்தில் நெல் பயிரில் இலைப்பேன் தாக்குதல் நெல் நாற்றங்காலில் தென்படுகிறது. இவற்றை கட்டுப்படுத்த பாஸ்போமிடான் 40 எஸ்.எல் 50 மில்லி அல்லது மானோகுரோட்டபாஸ் 36 எஸ்.எல் 40 மில்லி 20 சென்ட் நாற்றங்காலில் தெளிக்கவும்.

திருவள்ளுர் மாவட்டத்தில் நெல் பயிரில் இலைச்சிலந்தி தாக்குதல் தென்படுகிறது. இவற்றை கட்டுப்படுத்த டையபென்தியூரன் 50 WP 900 கிராம் /எக்டர் அல்லது பென்பூராக்சிமேட் 5 SC 600 மில்லி / எக்டர்.

ஈரோடு, தஞ்சாவூர் மற்றும் நாகப்பட்டினம் மாவட்டத்தில் பச்சை தத்துப் பூச்சியின் தாக்குதல் தென்படுகிறது. இவற்றை கட்டுப்படுத்த நெல் நடவு செய்த 15 மற்றும் 30 ஆம் நாளில் கீழ்கானும் ஏதாவது ஒரு மருத்தினை தெளிக்கவும். மானோகுரோட்டோபாஸ் 36 எஸ். எல் 1000 மில்லி / எக்டர் அல்லது பாஸ்மோமிடன் 40 எஸ் . எல் 1000 மில்லி / எக்டர் அல்லது பென்தியான் 100 இ . சி 500 மில்லி / எக்டர் அல்லது புரபினோபாஸ் 50 இ . சி. 1000 மில்லி / எக்டருக்கு தெளிக்கவும்.

*பருத்தி*

*தேனி, தர்மபுரி, திருநெல்வேலி மற்றும் சேலம் மாவட்டங்களில் பருத்தியில் காய்ப்புழுவின் தாக்குதல் தென்படுகிறது. இவற்றை கட்டுப்படுத்த இனக்கவர்ச்சி பொறிகளை ஏக்கருக்கு ஐந்து வைத்து தாய் ஆண் அந்து பூச்சிகளை கவர்ந்து அழிக்கவும். அதிகம் சேதம் உள்ள பயிர்களில் (1000 லிட்டர் தண்ணீர் / எக்டருக்கு) பாசலோன் 35 இ.சி 2.5 லிட்டர் / எக்டர் அல்லது குனைல்பாஸ் 25 இ.சி 2 லிட்டர் / எக்டர் அல்லது கார்பரில் 50 WP 2.5 கிலோ / ஏக்கர் அல்லது குளோர் பயிரி பாஸ் 20 இ.சி 2 லிட்டர் / ஏக்கருக்கு பயிர்களில் தெளிக்கவும்.*

*சேலம் மாவட்டத்தில் பருத்தியில் வெள்ளை ஈயின் தாக்குதல் காண்பபடுகின்றது. இவற்றை கட்டுப்படுத்த தாவரப் பூச்சிகொல்லி மருந்தினை தனியாகவோ அல்லது இராசயண மருந்துகளோடு கலந்து தெளிக்கவும்.*

*வேப்பங் கொட்டைச்சாறு 5 சதம் அல்லது வேப்ப எண்ணெய் 3 மில்லி / ஒரு லிட்டர் தண்ணீருக்கு அல்லது மீன் எண்ணை சோப் 25 கிலோ (1 கிலோ 40 லிட்டர் தண்ணீருக்கு) அல்லது நொச்சி இலைச்சாறு 5 சதம் அல்லது கீழ்காணும் ஏதாவது ஒரு மருந்தினை பயிர்களில் தெளிக்கவும்.*

***1. இளம் பருவத்தில் - (500 லிட்டர் தண்ணீர் / ஏக்கருக்கு)***

*மிதைல்டிமட்டான் 25 இ.சி 500 மில்லி / எக்டருக்கு அல்லது பாஸ்போமிடான் 40 எஸ்.எல் 600 மில்லி / எக்டருக்கு.*

***2. மத்திய மற்றும் வளர்ந்த பருவத்தில் (1000 லிட்டர் தண்ணீர் / ஏக்கருக்கு)***

*பாசலோன் 35 இ. சி 2.5 லிட்டர் / எக்டர் அல்லது மானோகுரோட்டோபாஸ் 36 எஸ். எல் / எக்டர் அல்லது ட்ரை அசோபாஸ் 40 இ. சி 2 லிட்டர் / எக்டருக்கு அல்லது அசிபேட் 75 எஸ். பி 1.5 கிலோ / எக்டருக்கு.*

***நிலக்கடலை***

*சேலம், திருநெல்வேலி, திருவண்ணமாலை, புதுக்கோட்டை மற்றும் தர்மபுரி மாவட்டங்களில் நிலக்கடலையில் இலைச்சுருட்டு புழுவின் தாக்குதல் தென்படுகிறது. இவற்றை கட்டுப்படுத்த ஏக்கருக்கு ஒரு விளக்கு பொறி வைத்து அந்திப் பூச்சிகளை கவர்ந்து அழிக்கவும் தேவைப்படின் கீழ்காணும் ஏதாவது ஒரு மருந்தினை பயிர்களில் தெளிக்கவும். டைகுளோர்வாஸ் 75 WSC 625 மில்லி / எக்டர் அல்லது மானோகுரோட்ட பாஸ் 36 WSC 750 மில்லி / எக்டர் அல்லது குளோர் பயிர் பாஸ் 20 இ. சி 1250 மில்லி / எக்டர் அல்லது பாசலோன் 35 இ. சி 750 மில்லி / எக்டர்.*

***தகவல்***

*இயக்குநர்,*
*பயிர் பாதுகாப்பு மையம்,*
*தமிழ்நாடு வேளாண்மை பல்கலைக் கழகம்,*
*கோயம்புத்தூர் –641 003.*

*மக்கள் தொடர்பு அலுவலர்*